உ
சிவமயம்



வட்டுக்கோட்டை தினநாத முதலியார் வழித்தோன்றலும்
அராலி தெற்கு வாசியுமாகிய
திருவாளர்
கதிரவேலு சண்முகசுந்தரம்
(ஆங்கில ஆசிரியர்)
அவர்களின்

# நினைவு மலர்

ஈசுர ஆண்டு ஆடித் திங்கள்
11-08-1997

உ

# சமர்ப்பணம்



எங்கள் உள்ளத்தில் என்றும் நீங்காது
ஒளிர்ந்து கொண்டிருக்கும் அணையாத
தீபத்தின் பாத மலர்களில்
இந். நினைவு மலரை
காணிக்கையாக சமர்ப்பிக்கிறோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்

௨

சமர்ப்பணம்



[illegible]

காணிக்கையாக சமர்ப்பிக்கிறேன்.

[illegible]

அமரர்

# கதிரவேலு சண்முகசுந்தரம்



மண்ணுலகில் ;
**10-05-1942**

விண்ணுலகில் :
**12-07-1997**

**திதி நிர்ணயம்**

ஈசுர வருடம்
ஆனித் திங்கள்
பூர்வ பட்சம்

# அமரரின் வரலாறும் உறவுகளும்

வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டையூரின் தினநாத மூதலியார் பரம்பரையில் வந்துதித்த திரு அம்பலவாணர் கதிரவேலுவுக்கும் அவர் தம் துணைவியார் நாகநாதர் இராசம்மாவுக்கும் கனிஷ்ட புத்திரனாக 'கடைக்குட்டி' என்னும் செல்லப்பிள்ளையாக 1912-05-10ல் பிறந்தவர் திரு சண்முகசுந்தரம்

## கல்வி

பெயருக்கேற்ப சண்முகமும் சுந்தரமுமாய் சீரோடும் சிறப்போடும் வளர்ந்து தன் கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பூர்த்தி செய்தார்.

## மணப்பொருத்தம் :

அராலி தெற்கு திரு. சொக்கலிங்கம் – பாக்கியம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியான மகேஸ்வரி சுந்தரனுக்காகவே பிறந்திருந்தார் இருவரும் இனிய திருமண உறவில் முகிழ்ந்த நாள்

## மக்கட் செல்வம் :

இவர்களின் அன்பும் அறனும் நிறைந்த பூவும் மணமும் போன்ற இணைபிரியா வாழ்வில் நான்கு செல்வங்கள் உதித்தனர் மூத்தவர் உதயகுமார் பின்னர் லவகுமார் செல்வமகள் தேவதர்ஷினி இறுதியாக இளவல் பாலகுமார்.

## சேவை :

இலங்கை கல்விச்சேவையில் 1970ம் ஆண்டில் தன்னை இணைத்துக்கொண்ட திரு. சண்முகசுந்தரம் காலப்போக்கில் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரானார். அவரின் சேவையை அடைந்த கல்விக்கூடங்களில் பின்வருவன அடங்கும்.

வட்டு திருநாவுக்கரசு வித்தியாசாலை
ஊரி தமிழ்க்கலவன் பாடசாலை
நானாட்டான் முஸ்லீம் மகாவித்தியாலயம்
வட்டு வள்ளியம்மை வித்தியாசாலை
அராலி அமெரிக்கன் மிஷன் பாடசாலை
அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை
அராலி இந்துக் கல்லூரி
திருவையாறு மகா வித்தியாலயம்

'சேர்' மாணவச் செல்வங்களின் அன்புக்குரியவராயிருந்தார், நட்புக்குரியவராயிருந்தார், மதிப்பிற்குரியவராயும் மிளிர்ந்தார்.

## உடன் பிறப்புக்கள்

திரு. கதிரவேலு சண்முகசுந்தரத்தின் உடன்பிறப்புக்களில் மூத்தவர் நாகேஸ்வரி. வட்டுக்கோட்டையூர் முத்துக்குமாரு அம்பலவாணர் என்கிற தனது முறை மைத்துனரை பட்டினசபை பிரதம எழுதுநரை இவர் மணந்தார். இவர்களின் ஓரே புதல்வி நகுலாம்பிகை. அம்பலவாணர் நகுலாம்பிகை கொல்லங்கலட்டியை சேர்ந்த சிற்றம்பலம் ஸ்ரீகணேசலிங்கத்தை மணம் முடித்தார். இவர்களின் மகள் உஷாநந்தினி மறைந்த சண்முகசுந்தரனாரின் முதல் பேரப்பிள்ளை ஆவார்.

நாகேஸ்வரிக்கு அடுத்தவர் புவனேஸ்வரி. புவனேஸ்வரி சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஓவசியர் நன்னித்தம்பி தில்லையம்பலத்தை மணமுடித்தார். இவர்களுக்கு மகப்பேறு இல்லை இருவருமே அமரத்துவம் எய்திவிட்டனர்.

மூன்றாமவர் திரு. சிதம்பரநாதன் போர்ணியோ நாட்டில் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரி Air trafic Controller யாக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். மாதகலைச் சேர்ந்த மாரிமுத்து சௌந்தர்யராணியை மனைவியாக்கிக் கொண்டவர் இவர்களுக்கு நான்கு பிள்ளைகள் செல்விகள் பிரேமா கணக்காளராயும் ரூபி மருந்தாளராகவும் றெய்னா ஆசிரியையாகவும் திரு. செந்தில் மிருக வைத்திய நிபுணராகவும் போர்ணியோவில் கடமையாற்றுகின்றனர்.

நான்காமவர் திரு அம்பலவாணர் தாவளையைச் சேர்ந்த செல்லத்துரை சரஸ்வதிதேவியை மணமுடித்தார். இவர்களுக்கு கதிரவேலு செல்வராணி பிரேமராணி ஹேமராணி என்னும் நான்கு பிள்ளைச் செல்வங்கள் உள்ளனர்.

அமரரின் நேர்மூத்த சகோதரி மகேஸ்வரி தம்பியின் மறைவுக்கு ஒன்றரை வருடங்களுக்கு முன்பு ஜனவரி 1996 ல் இவரும் காலமாகிவிட்டார். மகேஸவரி கைதடியைச் சேர்ந்த கந்தையா சந்திரசேகரம் அவர்களை மணமுடித்தார். விவசாய உத்தியோகத்தராகவும் கிராம சேவையாளராகவும் பணியாற்றி சந்திரசேகரம் ஓய்வு பெற்றுள்ளார் இவர்களுக்கு இரு பெண்மக்கள் மூத்தவர் சிவசக்தி தொல்புரத்தைச் சேர்ந்தபொறியியலாளர் இராசநாயகம் சர்வானந்தனை மணமுடித்து சிங்கப்பூரில் வாழ்கிறார். செல்வன் ரகுமயூரன் இவர்களின் மகனாக அமரரின் பேரனாக வந்துதித்துள்ளார். இளையவர் கலாசக்தி சுழிபுரத்தை சேர்ந்த பாலசுந்தரம்பிள்ளை இரவிச்சந்திரன் என்னும் கணனியாளரை மணந்து கனடாவில் வாழ்கிறார்.

'வாத்தியார்' சண்முகசுந்தரம் மனித நற்பண்புகள் அனைத்தை யும் தன்னோடு வரித்துக்கொண்டார் சீற்றமோ சினமோ கோபமோ குரோதமோ அவர் அறியாதவை. மனமுறிவைக்கூட அவர் சோக மான முறுவலால் வெளிப்படுத்தும் வல்லமையைப் பெற்றிருந்தார். அவரோடு சம்பாசணையில் ஈடுபட்டால் நேரம் காலம் போவதே தெரியாது. வராலி மாதாங்கோவில் பிள்ளையாரின் மண்டபம் சுந்தரனாரின் தர்ப்பாராக இருந்தநாட்கள் மறக்கமுடியாதவை.

அமரர் இவ்வுலகில் நிலையில்லா செல்வத்தை சேர்க்க முயன்ற தில்லை. அந்தவகையில் அவரை முயற்சியற்றவர் என்றுகூட சிலர் குறைகூறுவர். ஆனால் ஆசிரியர் அவர்களோ வாழ்ந்தவிடம் மட்டு மல்ல சென்றவிடமெல்லாம் 'மக்களின் அன்பு, நட்பு,' என்னும் அழி யாச் செல்வத்தைச் சேர்த்தார். இடம்பெயர்ந்திருந்த நாட்களில்கூட கைதடியிலாகட்டும் வன்னியிலாகட்டும் அவரைச் சுற்றி ஒரு கூட்டம் இருக்கும் அவரைத்தேட பலர் இருப்பர்.

தான் முன்நின்று கட்டிய வீட்டிலேயே தன் இறுதிச் சிலநாட் களை அமைதியாய்க் கழித்து இறையடி எய்திவிட்டார் அமரர் கதிரவேலு சண்முகசுந்தரம் அன்னாரின் ஆத்மா சாந்தியும் வளமும் பெற இஷ்ட தெய்வங்களான அம்மனும், பிள்ளையாரும் என்றும் அருள் புரிவார்களாக.

ஓம் சக்தி

மனைவி, மக்கள்



## மனைவி புலம்பல்

கணவனே கண்கண்ட தெய்வம் என்று
காலையிலும் மாலையிலும் கை தொழுது வந்தேன்
காசினியில் யார் எமக்கு இனி உதவி ஐயா
கண்ணீரே நித்தம் சிந்துகின்றேன்.

மின்னாமல் முழங்காமல் போவீர் என்று
யாரும் நினைக்கவில்லை ஐயோ
ஐயா இன்று தவியாய் தவிக்கின்றோம்
தரணியின்மீது! புலம்புகின்றேன் நித்தம் ஐயா.

ஆசானாய் எமக்கு நல்ல புத்தி சொன்னீர்
ஏகுவீர் எமக்கு இது இனிமை தரும்
காசினியில் உங்களைப் போல் யாரும் இல்லை
கருணை மிக்க ஐயாவே எங்கு சென்றீர் எங்கணவா?

## பிள்ளைகள் புலம்பல்

அப்பா என்றால் தூக்கி முத்தம் தந்தீர்
அருமையாய் வளர்த்த எங்கள் அப்பா எங்கே?
அன்றாடம் பாடம் சொல்லி ஆங்கிலமும் தான் சொல்லி
தேவாரம் பாட அப்பா இறைவனடி சேர்ந்தீரே

நான்கு பிள்ளைகளும் நலமுடன் வாழ
சீலமாய் வளர்த்தீர் இனி யார் துணை அப்பா
ஆங்கிலமும் செந்தமிழும் அறியவைத்தீர் தந்தையாரே
மாதாங் கோயில் கணபதியே என்று சரணடைந்தீர்

## பெண்மகள் புலம்பல்

அன்பினைச் சொரிந்து எங்களை ஆளாக்கி
அறிவினை ஊட்டி வளர்த்த அப்பாவே
இன்றெமைத் தவிக்கவிட்டு இந்நிலம் நீத்து
இறையடி சேர்ந்தமை முறையாமோ
குன்றென நிமிர்ந்த எங்கள் அப்பா
குறைவிலாதெங்களை வாழ்விப்பாரென்று
நன்றென நினைந்தோம் நம்பியே வளர்ந்தோம்
நடுவழியில் நமைவிட்டு பிரியவும் மனம் வந்ததோ

பலகாலம் ஆசிரியனாக பல பிள்ளைகளுக்கு அறிவூட்டி
சிலகாலம் நோய்வாய்ப்படட்டு சீர்குலைந்தது எங்கள் அப்பா
இனியார் துணையோ எங்கள் அப்பா
கணபதியே சரண்புகுந்தோம் உண்மை! உண்மை!

## இனத்தவர் புலம்பல்

அப்பனே சண்முகா ஆறுதல் யாரையா?
செல்லமாய் ஒன்றுகூடி சண்முகம் என்றழைத்தோம்
இப்போ நீ இல்லை ஐயா ஏறுமயில்
ஏறி இயமனிடம் சென்றீரோ!

## ஆசிரியர்கள் புலம்பல்

பயிற்றப்பட்ட ஆசிரியராய் பலகாலம் சேவை செய்தீர்
பாரினில் உம்மைப்போல் யார் ஐயா கல்வி சொல் ?
அராலி கிழக்கு அமெரிக்கன் பள்ளியிலே
ஆசிரியர் அனைவரும் அழுகின்றோம் அழுகின்றோமே.

## பெறாமக்கள் புலம்பல்

ஆங்கில அறிவினை புகட்டிய அருமை பெரியப்பாவே
நாம் இனி யாரை பெரியப்பா என்றழைப்போம்
அன்புடனே பெயர் கூறி அழைக்கின்ற வேளைதனில்
செல்லமாய் பெரியப்பா என்று அருகில் சேர்ந்திடுவோம்

தூரதேசம் சென்று வீடு திரும்பும் வேளைதனில்
அருமையாய் எம்மை அழைத்து மிட்டாய்கள் தந்து விட்டு
செல்வீர்களே
என்ன பிழை செய்தாலும் பொறுமையுடன் பொறுத்து
அன்பான வார்த்தைகள் கூறிவிட்டு செல்வீர்களே
உங்களை தேடி தவிக்கின்ற எங்களுக்கு
ஆறுதல் கூறினாலும் புரியாது! புரியாது!

# அனுதாபச் செய்தி

அராலி கிழக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன் பாடசாலையில் கடமையாற்றிய திரு. த. சண்முகசுந்தரம் ஆசிரியர் அவர்களின் மரணச்செய்திகேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளோம். இப்பாடசாலையில் நீண்டநாட்களாக கடமையாற்றி தனது விவேகத்தாலும், நேர்மையாலும், புன்சிரிப்பாலும் சகலரதும் மனதைக் கவர்ந்தவர் திரு த. சண்முகசுந்தரம் ஆசிரியர் அவர்கள். அவரின் திடீர் மறைவு அன்னாரின் குடும்பத்துக்கு மட்டுமல்லாது எமது பாடசாலைக்கும் பேரிழப்பாகும்

வாழ்க்கையில் பல ஆண்டுகள் சிறப்புடன் வாழவேண்டிய காலத்தில் அவர் எம்மைவிட்டுப் பிரிந்தமை வேதனைக்குரிய நிகழ்வாகும்.

''எப்பவோ முடிந்த கதை" என்ற வாசகத்தை நினைவுகூர்ந்து ஆறுதல் அடைவோம்.

திரு. த. சண்முகசுந்தரம் ஆசிரியர் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் துணைவியாருக்கும் அவரது பிள்ளைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

யா / அராலி கிழக்கு அ. மி. த. க. பாடசாலை
சங்கானைக் கோட்டம்.

முன்னைநாள் அதிபர்,
அதிபர், ஆசிரியர்கள்

# ஆசிரியர் சண்முகசுந்தரத்தின் புகழைப் பாட

அராலி கிழக்கு அ மி. த. க பாடசாலையில்
    சிறப்புடன் பணிக ளாற்றி
அனைவரும் கலங்கிச் சோர
    இறையடி சேர்ந்த எங்கள்
சண்முகசுந்தரத்தின் புகழைப் பாட
    முனைந்திடும் வேளை நெஞ்சம்
சலனத்தால் விழிகள் நீரால்
    ததும்புதே என்ன செய்வோம்.

காலையிற் பாடசாலையி னுள்ளே
    கால் வைக்கும் போதெமக்குக்
காலை வந்தனங்கள் கூறி
    வாழ்த்திடும் செவ்வாய் எங்கே?

அறிவுரை கேட்கும் போது
    அன்புடன் முறைகள சொல்லி
அவைபற்றி விளக்கம் கூறி
    அணைத்திடும் கரங்கள் எங்கே?

நாம் சொல்லும் விகடப் பேச்சை
    விருப்புடன் கேட்டு உள்ளம்
நயப்பதோ டுடலும் குலுங்கச்
    சிரித்திடும் ஆசிரியர் எங்கே?

நிலமிசை பிறப்ப ரெவரும்
    நீடுழி வாழ்வ தில்லை
நிலமிறை வாழ்வோ ரெல்லாம்
    பீடுற வாழ்வதில்லை
நிலமிசை பிறந்து வேண்டும்
    பீடெல்லாம் பெற்று வாழ்ந்து
நிலவணி ஈசன் பாதம்
    ஆசிரியர் சண்முகசுந்தரம் இணைந்தாரன்றோ

அதிபர், ஆசிரியர்கள்

# நிலவே நீதான் திருவிழா

மார்கழிப் பூக்கள்
மறையு முன்பே
மரணம் ...
மாலையிட்டதோ!

ஒரு ரோஜாவின்
முதல்ச் சிரிப்பு
உங்கள் ...
முகத்தை மறைத்ததுவோ?

புன்சிரிப்பு
தவிழ்ந்திடும் ஆசிரியரே
நிலவின் ஒளியில்
நீந்தச் செல் நீரோ?

ஆங்கில ஆசிரியர் இல்லாது
அலைந்திட்ட வேளைதனில்
வன்னியில் இருந்து வந்திறங்கி
ஆங்கில அறிவினை ஊட்டிய
ஆசிரியரே ஆண்டவனடி சேர்ந்தீரே

வருடங்கள் ...
பாதியில் கரையு முன்பே!
வாழ்க்கையை ...
தேதியில் முடித்த
முத்திரை எதுவோ?

நல்ல குடும்பம்
நல்ல மனைவி
நல்ல மக்கள்
எல்லாம் இருந்தும்
இடம்பெயர்ந்து வந்ததால்
உன்தன் இதயம்
இடம் பெயர்ந்ததோ?

ஆசிரியரே

உனது மரணம்
தேதிக்கு முன்பே
திருவிழா நடத்தி விட்டது

பூரண நிலவே
உன் புகழ்
உன் கல்வி
உலகம் உள்ளவரை
ஊரறியும்
மீண்டும் மீண்டும்
புதிதாய் புதிதாய்
பொழுதாய் நினைப்போம்

**8–ம் ஆண்டு மாணவர்கள்**

# கலங்குகின்றது கல்விச் சமூகம்

வைத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வம் ஆகி விட்ட கதிரவேலு சண்முகசுந்தரம் அவர்களின் மறைவையெண்ணி கல்விச் சமூகம் கண்ணீர் வடிக்கின்றது.

சிறந்த ஆங்கில ஆசிரியனாய் கால் நூற்றாண்டு கடமை புரிந்தவர். ஆங்கிலம் பயிலவென அல்லும் பகலும் அலையும் மாணவரின் அறிவுப் பசியைப் போக்கியவர். அனைவரையும் அன்போடு ''தம்பி'' என்று அழைப்பர். அறிவுரை கேட்டுச் சென்றவர்களுக்கு அன்போடு நல்லறிவுரைகள் வழங்கியவர். மன்னார் தொடக்கம் அராலி கிராமம் வரை அளப்பரிய சேவையை அளித்தவர். அராலியிலே, அராலி கிழக்கு அ மி.த.க பாடசாலை, முருகமூர்த்தி வித்தியாலயம், அராலி இந்துக் கல்லூரி என்பன அவரது சேவையால் உயர்வு பெற்றன அக் கல்லூரி அதிபர்களின் பாராட்டுதல்களைப் பெற்றவர். பணத்திற்காக பிரத்தியேக கல்வி போதிப்பதை அடியோடு வெறுத்தவர் ஆங்கிலம் கற்போருக்கு எந்நேரமும் ''ஏணிப்படியாக'' விளங்கியவர் சிறந்த நல்ல உள்ளம் கொண்ட தன்னலமற்ற தியாக சிந்தையுள் ஓர் ஆங்கில பயிற்சி பெற்ற ஆசிரியரின் சேவையை அராலிக் கிராமம் இழந்துவிட்டது. நல்ல உள்ளம் படைத்த அவரின் சேவையை கண்ட இறைவன் அவரைத் தன்பால் அழைத்துவிட்டான் போலும்

அவரின் ஆத்ம சாந்திக்குஇறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

ஆக்கம் :

**க. சந்திரசேகரன்**

அதிபர்

யா/வட்டு கார்த்திகேய வித்தியாலயம்

# சேவையால் உயர்ந்த செம்மல்

அமரர் திரு. கதிரவேலு சண்முகசுந்தரம் அவர்களை யாழ்ப் பாணக் கல்லூரியில் படிக்கும் காலத்திலிருந்து நன்கு அறிவேன். அவர் இளமையில் மிகவும் துடிப்புடன் துள்ளித் திரிந்தவர். பின்னர் ஆசிரிய சேவையில் சேர்ந்து ஆங்கில ஆசிரியராகச் சேவையாற்றி னார். நான் அதிபராக கடமை ஏற்ற பின்னர் அராலி இந்துக்கல் லூரிக்கு ஆங்கில ஆசிரியராக 1993 ஏப்ரலில் நியமிக்கப்பட்டார். ஏறத்தாழ இரு வருடங்கள் எங்களுடன் சேறையாற்றினார். இவர் பழகுவலற்கு மிகவும் இனியவராக இருந்தார். தனது கடமையில் ஒரு நாளும் தவறியதில்லை. சக ஆசிரியர்களுடனும் மாணவர்களு டனும் மிகவும் அன்பாகப் பழகி அவர்களின் மனதில் அழியாத இடத் தைப் பெற்றுக் கொண்டவர். இவர் எப்பொழுதும் மாணவரின் ஒழுக்கத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து அவர்களை வழி நடத் திச் சென்றவர்.

பாடசாலைக் கருமங்களில் முன்னின்று உழைத்து கிராமமக்க ளின் அன்பையும் பெற்றுக்கொண்ட நல்ல ஒரு ஆசிரியர். இவர் அதிபர், ஆசிரியர் மாணவர்களுக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கி ஆசிரியத்தொழிலின் மகிமையை எடுத்துக் காட்டியவர். அவர் இன்று நம்மிடையே இல்லை. பிறப்பதும் இறப்பதும் இயற்கையின் நியதியாயினும் அன்னாரின் இழப்பு கல்விச் சமுதாயத்திற்கு ஒரு பாரிய இழப்பாகவே நான் கருதுகின்றேன். அதிலும் ஆங்கிலம் போதிக்க ஆசிரியர்கள் இல்லாத இக்காலத்தில் அன்னாரின் மறைவு பெரிய இழப்பாகும்.

கல்விச் சமுகத்திற்கு மாத்திரமல்ல அவரின் குடும்பத்தாருக்கும் பாரிய இழப்பு. இதை ஈடுசெய்ய முடியாது. எனினும் அக்குடும்பத் தின் எதிர்காலம் நல்லபடியாக அமைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவார் என நம்புகின்றேன்.

செல்வராசா
முன்னாள் அதிபர்
யா / அராலி இந்துக்கல்லூரி

# அன்பினில் விளைந்த ஆரமுதே

அ ... ப் ... பா .......... அப்பா ... ...

சின்னக்குழந்தையில், செல்லநாவினால், கொஞ்சு மழலையில், உச்சரித்து உச்சரித்து, உருக்கூட்டி உனைநான் அழைத்ததை, இப்போ, இன்றைக்கு, ஏகாந்தத் தனிமையிலே எனை இருத்திவருத்து கையில், எண்ணிப் பார்க்கிறேன்.

அண்ணன் உதயனுக்குத்தான் 'அப்பா' எனக்கூப்பிட வருமா? எனக்கு வராதா? ஏன் வராது? அம்மாவும் அண்ணாவும் உதடு குவித்து உச்சரித்துக்காட்ட நான் சட்டெனவே பற்றிக்கொண்ட மந்திரச் சொல் 'அப்பா'

என் அப்பனே, என் ஐயனே என நீ வாழ்ந்த நாட்களில் உன்னை நான் பாடியதில்லை.

தாயினும் நல்ல தலைவனாய், அன்பினில் விளைந்த ஆரமுதாய் தண்ணளி வேந்தனாய் எனக்கு மட்டுமல்ல எங்கள் குடும்பத்திற்கே இருந்தவன் நீ.

பொங்கும் செல்வம் எங்களிடம் இல்லாதிருக்கலாம் ஆனால் வறுமை என்று ஒன்றை நாம் அறியாது இருந்தோம். வீட்டின் வறுமை உன் நாவிலிருந்தது. உன் வல்லமையில் நாம் செல்வராய் திகழ்தோம்.

அப்பா, என்றென்றும் என் பிரியத்துக்குரியவனே, நீ தந்தையாக, குடும்பத்தேரின் சாரதியாக, எல்லோரையும் கட்டியாளும் தலைவனாகவா இருந்தாய். இல்லை, நீ எங்களை ஆளுவதைவிட்டு ஆட்கொண்டிருந்தாய் என்றுமே எங்கள் நண்பனாய், சினேகிதனாய் நல்ல 'யாரியாய்' புதுப் பரிணாமம் கொண்ட தந்தையாய்த் திகழ்ந்தாய்

உணவுகளின் ருசியை ஒவ்வொன்றாய் நீ விதந்துரைக்கையில் என் நா ஊறும் நானும் ருசிதேடப் பழகி விட்டேன் அதே வேளை அறுசுவை அன்னத்தில் மட்டுமல்ல பழஞ்சோற்றிலும் சம்பலிலும் கூட பாங்கான சுவை உண்டென்ற ஏற்றத்தாழ்விலா சமத்துவத்தையும் எனக்கும் எங்களுக்கும் நீயே உணர்த்தி வைத்தாய்.

ருசி கண்ட உன்நா உதிர்க்கின்ற வார்த்தைகளும் ருசியாகவே இருந்தன. உலகச் சம்பவங்களை உன் நாவால் நீ செப்புவதே தனி யழகு. வார்த்தைகளின் நேர்த்தியான கோர்வையும், இடையே 'நசுக்கிடாமல்' எட்டிப் பார்த்து சிரிக்கச் செய்யும் நகைச் சுவையு மாய் நீ பேசுவதை நாள் முழுவதும் கேட்டுக் கொண்டே இருக்க லாம். பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நீ பெரியதொரு பேச் சாளனாம். உன் சாதுரியம், பிறர் மனது நோகாவண்ணம் பேசுகின்ற ஆற்றல். எந்தக் கடுமையான விஷயத்தையும் மலர்க்கணைகளாக மாற்றி எய்வதில் நீ வல்லவன். கூர் அம்பு குத்தும். ரணமும் சீளும் வடியும். மலர்க்கணை முட்டும். மனதைத் தைக்கும். உன் வாக்கு வல்லமை பலித்துவிடும்.

அப்பா, இப்போ நானும் உன் வழியில் நாவசைத்துப் பார்க் கிறேன் நல்லதைபேச எனக்கு நீ வல்லமையைத் தா

வைத்தியசாலையிலேயே உன் முடிவை எனக்கு வைத்தியர் சொல்லிவிட்டார். அற்புதங்கள் நிகழலாம் என்ற எதிர்பார்ப்பு மனதில் மூலைக்குள் இருக்க ஒன்றரை மாதமாக 'உண்மை' யைப் பொத்தி வைத்துக் கொண்டு, உலகுக்கு விளங்க வைக்க முடியாச் சோகம் நெஞ்சுக்குள் சூறாவளியாகச் சுழன்றடிக்க, உன் முடிவை எதிர்பார்த்து உன் முன்னே நான் நாடகம் ஆடிக் கொண்டிருந்தேனே ………… என் சொல் கேட்டு குடும்பத்தினர் அனைவருமே நாடக மைந்தர்களாய் நடிந்தார்களே ……… அப்பா …… என் செல்ல அப்பா …… உன் முன்னே நாங்கள் அரங்கேற்றிய முதலும் கடைசியுமான பொய்மை இதுதான்

உன் நோயின் கொடுமையை நீ அறியக்கூடாது. அறிந்தால், பூவினும் மெல்லிய உன் பொன்னிதயம் வேதனையில் பொசுங்கி விடும், சட்டென்னவே மரித்துவிடும் என்கிற பயத்தில் உண்மையை மறைத்தோம். உனக்குச் சுகமாகி வருகிறது மீண்டும் எழுந்தோடித் திரியப்போகிறாய் என நாம் நம்பிக்கைகளை விதைத்தோம். அப்படி உனக்கு நம்பிக்கையூட்டுகையில் எமக்கு நாமே தெம்பூட்டிக் கொண் டோம்.

ஆனால் அப்பா, இன்னும் சில மாதங்கள் ஏன் சில வருடங்கள் கூட இறைவன் கருணையால் எங்களோடு நீ வாழலாம் என உருகும் உள்ளங்களில் நாம் கட்டிய கோட்டைகளைச் சிதைத்து விட்டு ஒரு மாதத்திலேயே நீ ஏன் ஓடிப்போனாய்?

அப்பா, விடை தெரியா வினாக்கள் என்னிடம் பலவுண்டு. அவற் சிலவற்றை கேட்கிறேன். பதிலை உணர வைப்பாயா?

உன் திறமைகளுக்கு குன்றின் மேல் தீபமாகப் பிரகாசித்திருக்க வேண்டியவன், ஏன் குடத்தினுள் விளக்காய் மாறி எட்டிப் பார்ப்பவர்களுக்கு மட்டுமே ஒளியைக் காட்டினாய்?

தந்தைக்கு மந்திரத்தின் சாரப் பொருளுரைத்த மைந்தனின் பெயர் கொண்ட ஷண்முக சுந்தரமே .. என் அப்பா ... உன் மைந்தனின் சொல்லுக்கு மகுடி முன் நாகமாய் பின் நாளில் நீ கட்டுண்ட மாயமென்ன? தந்தையே நீ யோகர் சுவாமிகளின் சீடனல்ல. ஆனாலும் 'சும்மா இரு' வும் 'எல்லாம் முடிந்த முடிபு' ம் உன்னை எப்படி ஆட்கொண்டன?

ஊர்க்கோலம் இரண்டு முறை என்பார்கள். உன் இரண்டாவது ஊர்க்கோலம் ஊரே வியக்கும் வண்ணம் நடந்தேறியது. உனக்கு இத்தனை உற்றார் சுற்றமா? உறவினர் நண்பர்களா? உன்னை நினைந்து எம்மைப் போல் உருகியவர்கள்தாம் எத்தனை பேர்?

அப்பா, எல்லாம் வியப்பாயிருக்கிறது. இன்று நீ எம்மைப் பிரிந்து விட்டாய். உளம் நிறைந்த சோகம் உனக்காக இருப்பினும் நீ சிருஷ்டித்துத் தந்த அன்பெனும் உலகினுள் நாம் தைரியமாய் வாழ்கிறோம்.

உன் பேரை ஊர் சொல்லவேண்டும். வாத்தியாரின் பிள்ளைகள் என ஊர் உலகம் சொல்லுகின்ற, பார்க்கின்ற, மதிக்கின்ற பொன்னான வருங்காலத்தை உன் புகழ் விளங்க நிச்சயம் நான் சிருஷ்டிப்பேன். அண்ணன் உதயனும், தம்பி பாலனும், தங்கை தர்ஷினியும் எல்லாவற்றுக்கும் மேலாக சிவனைப் பிரிந்த சக்தியாகிய என் உயிரினும் மேலான அன்னையும் இனி என் பொறுப்பு

அப்பா மேலிருந்து அனைத்தையும் பார் என்றும் எங்களை ஆசிர்வதி. எங்கள் சந்தோஷங்களில் சங்கமி.

காலமெல்லாம் சுந்து அப்புவின் நாமம் நிலைக்க எல்லாம்வல்ல பிள்ளையாரும் அம்மனும் அருள் தருவார்களாக.

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஒருரும் நீ

துய்ப்பனவும் மெய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வம் நீயே.

உயிரான மைந்தன்
லவக்குமார்

# அயராதுழைத்த ஆங்கில ஆசான்

கலைமகளும் அலைமகளும்
காதலித்தே உறைகின்ற
வட்டுக்கோட்டை அவர்
பிறந்த ஊராம் அதன் அயலே
அராலி அவர் புகுந்த ஊராம்
கதிரவேலு குடும்பத்தின்
காதற் புதல் வரவர்
அவர் சேவை நாடெங்கும்
பரந்த சேவை பார்த்திருமின்
மன்னார் மாவட்டம்
மாணவ குழா மனைத்தும்
மாண்புறு சேவையினால்
மதிநலம் படைத்தனரே
அராலிக் கிராம மதில்
அறிவுத் தீப மதை
அள்ளி அள்ளி வழங்கினரே
ஆங்கிலம் கற்க மிகு
ஆவலாய் வருபவரை
அறிவுச் சுடராக்கி
அகில மதில் புகழ் படைத்தார்
சேவை உள்ளம் படைத்த
சிந்தனை யாளரவர்
கற்றபடி ஒழுகும்
கருத்தறி வாளரவர்

பண்புடையார் அன்புடையார்
பல குணங்கள் தாமுடையார்
காதலித்தார் கடமைதனை
கண்ணும் கருத்துமாக — இன்று
நேசித்தார் இறைபதத்தை
அவர் மனைவி மக்களெல்லாம்
உற்றார் உறவினரும்
பாசத்தால் கலங்குகின்றார்
இது உலக இயற்கை யென்று
தேற்றிடுவோம் அவர் மனதை
அவரது ஆன்ம சாந்திக்காய்
பூசிப்போம் இறையடியை
போற்றிடுவோம் போற்றிடுவோம்

ஆக்கம்
திருமதி. சிவஞானம்
யா / அராலி சரஸ்வதி மகா
வித்தியாலய
(ஆசிரியை)

# ஆங்கில ஆசானை இழந்து தவிக்கின்றோம்

பயிற்றப்பட்ட ஆங்கில ஆசானாய் எமக்கு ஆங்கில அறிவினை அள்ளி வழங்கிய ஆசானை நாம் எப்படி மறப்போம்? பாடசாலை களில் மாணவரின் மதி நலத்தை அறிந்து அறிவூட்டும் ஆசானுக்கு இயமன் அழைக்கின்ற நாட்கள் கிட்டியதோ கணபதியின் சந்நிதியே சரணம் என புகுந்த இவ் ஆசானுக்கு பொல்லா நோய் கொடுத்து அழைத்தவர் யார்? மனைவி மக்களுடன் இன்பமாய் வாழ மறுத் தவர் யார்? தவிக்கின்றது தவிக்கின்றது அராலி கிராமமே தவிக் கின்றது உங்களுடன் பழகிய இனிமையான வாழ் நாட்கள் இனி எப்போ எமக்கு வரும்?.

ஆசானின் ஆன்மா சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஆக்கம்
பெறாமகள்
**க. ஜெயரூபி**

அமரர். கதிரவேலு சண்முகசுந்தரம்

# எனது நண்பரும் ஆசிரியரும்...

பற்றிச் சில வார்த்தைகள்

'மச்சான் வாணர்' இப்படி என்னை எங்கிருந்தாலும் அன்புடன் அழைப்பது வேறுயாருமில்லை சண்முகசுந்தரமே தான்.

நாம் இருவரும் யாழ்ப்பாணக் கல்லூரியில் பல ஆண்டுகள் ஒன்றாகப் படித்தோம். பின் ஆசிரியர்களானோம்.

எமது மாணவ வாழ்க்கையில் கல்லூரியின் முன்னாள் ஆங்கில ஆசிரியர் திரு. முத்தையா அவர்களிடம் நாம் கைமொழிகளில் வாங்கிய அடியின் காரணமாக நண்பர் ஓர் ஆங்கில ஆசிரியராக மாறிவிட்டார்.

அவர் படிக்கும் காலத்தில் நல்ல நாதமுடைய [தவிலைப் போல] மேசையைத் தெரிவு செய்து தனதாக்கிக் கொள்வார் மதிய போசன இடைவேளையின் போது வகுப்பில் அவருடைய கைகள் ஒரு சிறந்த தவில்மேதைக்குரியது போல் [வலங்கைமான் சண்முகசுந்தரம்] மேசை மேல் தவில் வாசிக்க நாங்கள் எல்லோரும் ரசித்து மகிழ்ந்ததை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை. இதனாற் தானோ அவருடைய பெற்றோர் சண்முகசுந்தரம் என்று பெயர் வைத்தார்களோ தெரியவில்லை.

பின் தனது வாழ்க்கைத் துணைவியை அராலி தெற்கில் தேடிக் கொண்டதன் மூலம் எமது நட்பு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. நாம் வெளி மாவட்டங்களிற் கடமையாற்றிய காலங்களில் [சுமார் 10 வருடங்கள்] ஒரே பஸ்ஸில் பிரயாண நண்பர்களாகச் சென்று வந்தோம்.

அண்மையில் நம் அனைவருக்கும் ஏற்பட்ட கஷ்டநிலை காரணமாக அவர் திடீர் சுகவீனமுற்றார். நான் பெரும் அதிர்ச்சி அடைந்தேன். அவரின் சுகயீனம் வைத்திய நிபுணர்களின் கைகளுக்கும் அப்பாற்பட்டதாகிவிட்டது.

அவர் செய்த நேர்மையான ஆசிரியப் பணியும், வயது வித்தியாசமின்றி எல்லோருடனும் அன்பாகவும். சிநேகித மனப்பான்மையுடனும் பழகிய தன்மையினாலும், அவரை நோயினால் அழுந்த விடாமல் இறைவன் தன்னோடு விரைவாகச் சேர்த்துக் கொண்டார்.

அன்னாருடைய இழப்பு அவருடைய குடும்பத்தாருக்கு மட்டுமல்ல, உற்றார், உறவினர், நண்பர்கள் ஏன் இப்பகுதி மாணவர்களுக்கும் கூட ஓர் பேரிழப்பாகும். அவரது பிரிவாற் துயருறும் குடும்பத்தவருக்கு ஆறுதல் கூறுவதோடு ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

உப அதிபர்<br>
யா / அராலி சரஸ்வதி ம. வி<br>
அராலி தெற்கு

நண்பன்<br>
**வி. அம்பலவாணர்**

## நல் ஆசிரியருக்கோர்
# இதய அஞ்சலி

ஞான விநாயகா நின் பாதம்
    நாம் தொழுதோம் -- தானமெனக்
கல்விதனை ஈந்த எம் ஞானகுரு
    சீரார் சண்முகசுந்தரம் மிகப் பெரியார்
அவர் பற்றி நாம் பாட அருள்தா -- நாயகனே
    ஆசிரியத் தொழிலை அமைவுடன்
ஆற்றி அன்பினால் வெற்றிகள்
    பல பெற்று - நேசமுடன்
ஆங்கிலக் கல்வியைப் போதித்தே மாணவர்க்கு
    புது மெருகூட்டிய ஆசான்.

பணியுமாம் என்றும் பெருமையென நேத்தி
    பணிவுடன் பணிகளை ஆற்றி
அணி பெற நலங்கள் யாவர்க்கும் ஆக்கி
    அயர்விலாத் தெம்புடன் உழைத்தீர்
கணிப்பினை வேண்டீர் கடமையே செய்தீர்
    கருத்தினில் தூய்மையே பூண்டீர்
மணியென ஒழுக்கம் நேர்மையும் கொண்ட
    மனிதராய் சேவைகள் செய்தீர்
ஏணியாய் நின்றே கல்வியில் பலர் உயர
    ஏற்றத்துடன் நீர் உழைத்தீர்

ஆசிரியர் தம் அறிவினைத் துவக்கி
    அரண் செயும் பெரியவரானீர்,

பாசமாய்ப் பழகிப் பரிவுடன் உதவும்
பயன் தரு நல்லவரானீர்,
நேசமாய்ப் பணிகள் நிதம் நிதம் ஆற்றும்
நித்திலக் குணமதின் சிகாமாய் – பலரும்
போற்றிடும் நற் பாதையில் படர்ந்தீர்
புகழ் தனை வேண்டாத மனிதராய்
நீதி வழி நின்று முன்னோர்
ஓதி வைத்த பாரிய நல் வழியினிலே நின்றீர்.

சண்முக சுந்தரத்தார் சாதுவான பேராசான்
சாற்றும் அவர் வழியில் பிரிந்து தவிக்கிறார்
மனைவி மக்கள் மற்றும் மாணவர் ஆசிரியர்
உம்மை இழந்தயாம் உயிர்மணி
இழந்த உடலமே ஆயினோம்
பருவ மழையில்லாப் பயிராகினோம்
என ஏங்கி அழுதாலும் - உறுதியுடன்
நீர் காட்டிய வழியில் உயர்கின்றோம்
சாந்தி தவழ சந்தோஷம் மலர - நீவிர்
மேலுலகில் நின்று எல்லோர்க்கும் ஆசிகள் செய்கிறீர்
அது போதும்.

இறைவனின் திருமலரடியில் இருந்து - சௌபாக்கியங்க
இன்பப் பேற்றையும் அடைந்த தங்களின் (ளையும்
அன்பான இதய வீணையின் தந்திகள் அனந்தம்!
அதன் ஒலிகள் கோடி! அவ் வீணையிலிருந்து
எழும் அன்பான கீதங்கள் வாண
மண்டலத்தை அவாவி பிரகாசித்து
வையத்தை ஜொலிக்க வைக்கும்
உணர்வுகளை - உம் அன்புக்கினியார்
உணர்கின்றனர் அம் மகிழ்வில் தங்கள் ஆன்மா
உயர்வடைந்த மகிழ்வில், நாமும் உறுதிபெறுகிறோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பா. தனபாலன் B. A [Cey]
ஆசிரியர்
யா-/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்
PRESIDENT
GRADUATE TEACHER PROFESSIONAL
DEVELOPMENT ORGANIZATION
JAFFNA.

௨

# தோத்திரத் திரட்டு

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
யித்த மாநிலத்தே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே!
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தந்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமாவிளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை! வளர்கநம் பக்தர்கள்!
வஞ்சகர் போயகல!

பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமைகோ வடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந் தோதற்கு அரியவன்
நிலவுலா விய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

# சரஸ்வதி துதி

## சகலகலாவல்லி மாலை

வெண் தாமரைக்கன்றி நின்பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சகமேழும் அளித்து
உண்டான் உறங்க வொழித்தான்
பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றும் ஐம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகலகலா வல்லியே.

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட் கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடும்கொலோ
உளம்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகலகலா வல்லியே

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்
வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகலகலா வல்லியே.

பஞ்சப்பு இதந்தரு செய்ய பொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே
நெடுந்தாட் கமலத்து
அஞ்சத்துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்திருந்தாய்
சகலகலா வல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
நல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகலகலா வல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண்
நல்காய் உளம்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகலகலா வல்லியே.

சொல்விற் பனமும் அவதானமும்
கவிசொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமைகொள்வாய்
நளினாசனம் சேர்
செல்விக்கு அரிதென்று ஒருகாலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலா வல்லியே.

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற் குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகலகலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி
உண்டேனும் விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகலகலா வல்லியே.

திருச்சிற்றம்பலம்.

## - நன்றியுரை -

★ நன்றி சொல்ல வார்த்தைகளில்லை. இதயம்நிறைந்த எண்ணங்களை இயன்றளவு சொற்களாக்கி நன்றி கூறு கின்றோம்.

★ தந்தையின் நோய்க்கு சிகிச்சையளித்த யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்கள், விசேடமாக வருகை புரிந்த சத்திர சிகிச்சை நிபுணர், உதவியாளர்கள், ஊழி யர்கள்.

★ நோயுற்ற வேளை எம்துயரத்தில் பங்கேற்று துணை நின்று நம்பிக்கையூட்டிய உற்றார் உறவினர் நண்பர்கள்

★ அராலியில் நெடுங்காலம் வாழ்ந்தாலும் அந்திமக்கிரிகை கள் வட்டுக்கோட்டையில் நிகழ்ந்தபோது தம் பூரண ஒத்துழைப்பைத் தந்த உற்றார் சுற்றம் உறவினர் நண் பர்கள் மற்றும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரிகைகளில் கலந்து கொண் டவர்களுக்கும்,

★ இம் மலரினை சிறந்த முறையில் அச்சிட்ட கலைமகள் அச்சகத்தினருக்கும் எமது இதயம் நிறைந்த பணிவான நன்றிகளை சமர்ப்பிக்கிறோம்.

திருமதி சண்முகசுந்தரம் மகேஸ்வரியும்
பிள்ளைகளும்.

கலைமகள் அச்சகம், பல்கலைக்கழகம் முன்பாக, திருநெல்வேலி.